B-FIT GYM
Ladies,Gents,Children Fitness Centre
Weight Reduction, Height gaining, Weight gaining, Body shape, Inches loss, Body fitness
HAMEEDIA SHOPPING MALL
IInd Floor, No.108,109, Triplicane High Road,Chennai - 600005.
Ph : 044-42663307
Cell : 98417 07251

TRIPLICANE, CHEPAUK, MYLAPORE, ROYAPETTAH

# TRIPLICANE NEWS

டிரிப்ளிகேன் நியூஸ்

மலர் - 5 இதழ் - 13 01 - 07- 2009 (01- 16) (மாதமிருமுறை) பல்சுவை இதழ்

நிறுவன ஆசிரியர் : A. பாக்யராஜ், இணை ஆசிரியர் : S. சஜீவகுமார்

பரத் சங்கித் நிகேதன்
இசை நாட்டியப் பள்ளி
73, டி.பி.கோயில் தெரு, முதல் சந்து, சென்னை-600 005.
போன் : 4356 8169, 2848 0931,
செல் : 99411 24431
வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மிருதங்கம், தபலா, டிரம்ஸ், கீபோர்டு, வயலின், கிடார் ஆகியவை கற்றுத் தரப்படும்

## நிலவில் குடியேறலாம்



விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளர்ந்து முன்னேறி வரும் பாதையில் இத்தகைய ஒரு புதுமுயற்சியை மேற்கொள்ளப்படப்போவது நம் அனைவருக்கும் ஒரு சாதனையாகவும் சந்தோஷமான விஷயமாகவும் நினைக்கத் தோன்றுகிறது.

வேற்றுகிரகத்தில் மனிதன் வாழ முடியுமா? என்ற தேடல், நிலவில் கால் பதித்த முதலாக இருந்து வருகிறது என்பது நாமறிந்த உண்மை. விஞ்ஞானிகள் குழுவினர்கள் நிலவில் வீடுகட்ட திட்டமிட்டுகின்றனர்.

ஸ்வீடனில் உள்ள மலார்டாலேன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானி மைக்கேல் ஜென்பெர்க் இந்த முயற்சியில் இறங்கியுள்ளார். இவர் சிறந்த நல்ல ஓவியரும் ஆவார். நிலவினில் வீடுகட்ட திட்டமிடும் இவர் ஒரு புதுமையான ரோபோவை வடிவமைத்து வருகிறார். இந்த ரோபோவை நிலவிற்கு அனுப்பி சிறிய வீடு ஒன்றை கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரோபோ வடிவமைப்பு நிபுணரான பேராசிரியர் லார்ஜ் அஸ்பிளண்ட் என்பவரின் உதவிகள் மூலம் தனது ஆரம்ப கட்ட பணியில் இறங்கியுள்ளார். தனது திட்டம் குறித்து மைக்கேல் கூறும்போது : ஒரு மனிதனின் சாதனையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் விருப்பத்தோடும் நிலவினில் வீடுகட்டும் முயற்சியில் இறங்கியுள்ளேன்.

இதற்கான ரோபோ பணி நடந்து வருகிறது. இதைக் கொண்டு 2012ம் ஆண்டு விண்வெளியில் வீடுகட்டும் பணி நிறைவேற்றப்படும். இது எங்கள் நாட்டிற்கு பெருமை சேர்க்கும் விஷயமாக இருக்கும் என்று கூறினார்.

ஓவியரான இவர் வாழும் சூழலுக்கேற்ற பல மாற்றுத் திட்டங்களை ஏற்கனவே அறிமுகப்படுத்தியவர். உதாரணமாக ஒரு பெரிய மரத்தின் மீது மரக்கட்டைகளால் ஆன ஓட்டலையும், தண்ணீருக்கு அடியில் ஒரு ஓட்டலையும் வடிவமைத்து கொடுத்தவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

- ரிஸ்வான்

CHENNAI REAL PROMOTERS (P)LTD
திருவல்லிக்கேணி
சந்தோஷ் கார்டன் - அரக்கோணம்
ஒரு சதுர அடி விலை ரூ.84/- மட்டுமே
முன்பணம் ரூ. 30,000/- மட்டுமே
ஜெயம் நகர் - திருத்தணி
ஒரு சதுர அடி விலை ரூ.55/- மட்டுமே
முன்பணம் ரூ. 40,000/- மட்டுமே
7ஸ்டார் அவென்யூ - ஆர்.கே.பேட்டை
ஒரு சதுர அடி விலை ரூ.50/- மட்டுமே
முன்பணம் ரூ. 10,000/- மட்டுமே
நிலா அவென்யூ - சோளிங்கர் ரயில்நிலையம்
ஒரு சதுர அடி விலை ரூ.84/- மட்டுமே
மேற்குறிப்பிட்ட தொகையை முன்பணமாக செலுத்தி மனையை தங்கள் பெயருக்கே பத்திரப்பதிவு செய்து கொள்ளலாம். மீதம் வட்டியில்லா சுலப தவணைகளில் செலுத்தலாம்.
மனையை பார்வையிட இலவச வாகன வசதி
மேலும் விபரங்களுக்கு
V. சுந்தர், Chief Marketing Manager
9884919299, 9789025170
உங்கள் கனவு மனையை கம்மி விலையில் வாங்க!
சென்னை ரியல் புரோமோட்டர்ஸ்க்கு வாங்க!
எண். 238/2/4, முதல்மாடி திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
ரத்னா கேப் பேருந்து நிறுத்தம் அருகில், சென்னை - 600005

just fresh
for daily needs
The Complete Food store
FRESH JUICES
FRESH VEGETABLES
PROVISIONS
ICE CREAMS
BOMBAY CHATS
POPCORNS
AMERICAN STEAM CORN
FRENCH FRIES



All Cards are Accepted
FREE HOME DELIVERY
Call : 28486666
No.191/382, Triplicane High Road,
Triplicane, Ellaiamman Koil Backside, Chennai - 5



CHENNAI FASHION


Ladies Tailoring & Designing,
Cosmetics, Burkha, Fancy Jewellery

# 101, Jani Jahn Khan Road,
Royapettah, Chennai - 14



9884141685, 9962112545

Md. Kasim SANTHI MEDICALS



MEDICAL & GENERAL

No.98, (New No.225), Pycrofts Road,
Royapettah, Chennai - 600014.
Cell : 9884220116, Ph : 28482307

FREE HOME DELIVERY

Good Luck Travel Links

A.O. Mohamed Sharbudeen
Mobile : 94440 81851
Email : goodlucktravellinks@yahoo.com
www.goodlucktravellinks.com


Landline : 91 44 28447682
91 44 4356 7869
Tele Fax : 91 44 28447869

Cabs (A/c & Non A/c Vehicles) Package Tours, Tickets (Bus, Train, Air), Hotel Reservations, Visa, Noc.Mobile Recharge & Accessories, Easy Bill Ltd., (Authorised Bill Collection Center)



# 7/4, Venkatachalam Chetty Street, Triplicane, Chennai - 600005

ரப்பானி வைத்திய சாலா



டாக்டர் ஹக்கீம் எஸ்.ஏ.செய்த் சத்தார்

139/65, டாக்டர் பெசன்ட் ரோடு
(மீர்சாகிப்பேட்டை மார்கெட் அருகில்)
ராயப்பேட்டை, சென்னை - 600 014.

தொலைபேசி
28476969, 28470874

ஆஸ்துமா, சைனஸ், கர்ப்பப்பை கோளாறுகள், வலிப்பு நோய், வெண்குஷ்டம், உயிர் அணுக்கள் நீர்த்துப் போகுதல், உடல் உறுப்புகள் சிறுத்து போதல், இந்திரியம் போகுதல், விரைவில் இந்திரிய ஒழுக்கு, தாம்பத்ய உறவில் குழப்பம், ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, சோரியாசிஸ், மூட்டுவலி போன்ற தீராத நோய்களுக்கு உடனடி தீர்வு.

(ராஜ் டி.வியில் புதன், சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 9.00 மணி வரை, சனிக்கிழமைகளில் காலை 8.55 முதல் 9.25 மணி வரை) ஜெயா டி.வியில் திங்கள் காலை 10.30 முதல் 11.00 மணிவரை, தமிழன் டி.வியில் தினசரி மாலை 6.00 முதல் 6.30 மணிவரை டாக்டரின் பேட்டியைக் காணத் தவறாதீர்கள்


### உழைத்திட வேணும்

உடம்பைப் போல பிடிச்சிக்கிட்டு உழைத்திட வேணும்
பாம்பைப்போல நழுவி கெட்ட சேர்க்கை போக்கணும்
நண்டுபோல கத்தரித்து பேச்சைக் குறைக்கணும்
நாயைப் போல நல்லவருக்கு நன்றி காட்டணும்
இரும்பைப் போல மனசுக்குள்ளே உறுதி இருக்கணும்
காந்தம் போல கவர்ந்திழுத்து நட்பை வளர்க்கணும்

ஏ.ஏ.எலக்ட்ரிகல் சர்வீஸ் சென்டர்
A.A.ELECTRICAL & SERVICE CENTRE

☛ வீடு மற்றும் வியாபார ஸ்தலங்கள் அனைத்திற்கும் ஒயரிங் செய்து தரப்படும்
சிறிய வேலைகளாக இருந்தாலும் செய்து தரப்படும்
☛ அனைத்து வகையான எலக்ட்ரிக்கல் பொருட்களும் சர்வீஸ் செய்து தரப்படும்
வீட்டிற்குத் தேவையான அனைத்து எலட்ரிக்கல் பொருட்களும் கிடைக்கும்

ஏ.அத்திக், உரிமையாளர்



5/3, ஜெனரல்சாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
போன் : (Off) 044-39165858, 9884326678,
(Res) 93807 79072, Credit card Accept

## தோப்புக்கரணம் எதற்கு என்றால்....?

பிள்ளையார் வழிபாட்டுக்கென்றே சில அம்சங்கள் இருக்கின்றன. சிதறு தேங்காய் போடுவது, நெற்றியில் குட்டிக் கொள்வது, தோப்புக்கரணம் போடுவது ஆகியவை பிள்ளையார் ஒருவருக்கே உரியவை.

பிள்ளையார் சந்நிதியில், இரண்டு கைகளையும் மறித்து நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும். இப்படியே இரண்டு கைகளையும் மறித்துக் காதுகளைப் பிடித்துக் கொண்டு, முட்டிக்கால் தரையில் படுகிற மாதிரி தோப்புக் கரணம் போட வேண்டும். இவை எதற்கு என்றால்...

யோக சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால் எப்படி மனஸையும் நல்லதாக மாற்றிக் கொள்ளலாம் என்று வழி சொல்லியிருக்கிறது. நம் உடம்பைப் பல தினுசாக வளைத்துச் செய்கிற அப்பியாஸங்களால், சுவாஸத்தின் கதியில் உண்டாக்கிக் கொள்கிற மாறுதல்களால் நம் உள்ளம் உயர்வதற்கான வழி அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வது, தோப்புக்கரணம் போடுவது இவற்றால் நம் நாடிகளின் சலனம் மாறும்; மனஸில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையோடு செய்தால் பலன் தெரியும்.

பிள்ளையாரை நினைக்கிறபோது ஔவையாரையும் நாம் சேர்த்து நினைத்தால் இரட்டிப்பு அநுக்கிரஹம் கிடைக்கும். 'விநாயகர் அகவலைச் சொன்னால் இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் நினைத்ததாகும். எல்லோரும் இதைச் செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமை தோறும் பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போய் "விநாயகர் அகவல்" சொல்லி விக்நேச்வரனுக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும். தமிழ் நாட்டின் பாக்கியமாகத் திரும்பிய இடமெல்லாம் அமர்ந்திருக்கும் அவரை நாம் எந்நாளும் மறக்கக் கூடாது. நமக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் எல்லா க்ஷேமங்களும் உண்டாவதற்கு ஔவையார் மூலம் பிள்ளையாரைப் பிடிப்பதே வழி.

- பூஜ்யஸ்ரீ சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி மஹாஸ்வாமிகள்

## அதிமுக சார்பில் திருவல்லிக்கேணி பகுதி வாக்காள பெருமக்களுக்கு நன்றி அறிவிப்பு மாபெரும் பொதுக்கூட்டம்



மத்திய சென்னை நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வாழும் வள்ளல் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் சார்பாக திருவல்லிக் கேணி பகுதி வாக்காள பெருமக்களுக்கு நன்றி அறிவிப்பு மாபெரும் பொதுக் கூட்டம் 23-6-2009, செவ்வாய்கிழமை, மாலை 6.00 மணி அளவில் இருசப்ப கிராமணி தெரு, 91வது வட்டம், திருவல்லிக் கேணியில் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் திரு.வி.பி.கலைராஜன், எம்.எல்.ஏ, திரு.பி.எஸ்.வாசன், பகுதி கழக செயலாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 91வட்ட செயல்வீரர் எஸ்.டி.சுதாகர், வி.கே.பாபு, சீ.மனோகரன், எம்.எஸ்.மணி, கே.பத்மநாபன் ஆகியோர் தலைமை வகித்தனர். இப்பொதுக்கூட்டத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் திரு.டி.ஜெயக்குமார், எம்.எல்.ஏ, திருமதி பதர்சயீத்,எம்.எல்.ஏ, எஸ்.எம்.கே.முகமது அலி ஜின்னா, டி.விஜயராமகிருஷ்ணன், அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்ச்சி ஏற்பாட்டை பி.எஸ்.வாசன், பகுதி கழக செயலாளர் மற்றும் எஸ்.டி.சுதாகர், 91வட்ட செயல்வீரர் ஆகியோர் செய்திருந்தனர். இதில் ஏராளமான கழக தோழர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# சாதனை படைத்துவரும் சென்னை ரியல் புரோமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்.

சென்னை அண்ணாநகரை தலைமை இடமாகக் கொண்டு சென்னை புறநகர் பகுதிகளில் மூன்றே மாதத்தில் 1000 வீட்டு மனைகளை விற்பனை செய்து பத்திரப்பதிவு முடித்து சாதனை படைத்த சென்னை ரியல் புரோமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இப்பொழுது திருவல்லிக்கேணியில் தமது கிளை அலுவலக திறப்பு விழா சலுகையை அறிவித்திருக்கிறது. அதாவது, மனையின் மொத்த தொகையில் பாதி தொகை மட்டுமே செலுத்தி மனையை தங்கள் பெயருக்கே பத்திரப்பதிவு செய்து கொள்ளலாம். மீதி தொகையை வட்டி இல்லாத சுலபத் தவணைகளில் செலுத்தலாம். முழுத் தொகை செலுத்துபவர்களுக்கு பத்திரப் பதிவு இலவசம். இது போன்ற பல திட்டங்களை செயல்படுத்தி கொண்டு இருக்கும் இந்த நிறுவனம் ஏழை எளிய மற்றும் நடுத்தர வர்க்கத்தின் வரப்பிரசாதமாக விளங்கிக் கொண்டிருக்கும் ஒரு உன்னத வீட்டுமனை விற்பனை நிறுவனம். குருவிகூட தனக்கென ஒரு கூடுகட்டி வாழும்போது மண்ணின் மைந்தர்களாகிய நாமும் ஒரு வீடுகட்டி வாழவேண்டும் என்கிற ஏக்கம் எல்லோர் மனதிலும் இருப்பது உண்மை. ஏழை எளிய மக்களானாலும் சரி, நடுத்தர வர்க்கமானாலும் சரி அனைவருக்கும் தேவையானது மூன்று அடிப்படையான தேவைகள்

1. உண்ண உணவு 2. உடுக்க உடை 3. இருக்க இருப்பிடம்.

இவற்றில் நம்மில் பலருக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைத்து விடுகிறது. ஆனால் சொந்தமாக (வீடு) இருக்க இடம் என்று வந்தால் அது நமக்கு எட்டாக் கனியாகிவிடுகிறது. காரணம் விலையேற்றம். நேற்றோ ஆயிரம் இன்றோ லட்சம், நாளையோ கோடி என்று விண்ணை மிஞ்சும் அளவிற்கு வீடு மற்றும் வீட்டுமனைகளின் விலையேற்றம். காரணம் மக்கள்தொகை. இதில் சீனாவிற்கு அடுத்தபடியாக நாம் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளோம். எங்கு பார்த்தாலும் கூட்டநெரிசல், டிராபிக்ஜாம். முதலில் மாநகரப் போக்குவரத்து சென்னையை சுற்றிலும் 25கிலோமீட்டர் சுற்றளவிற்கு இயக்கப்பட்டு வந்தது. பின்பு படிப்படியாக 30, 40, 50கிலோமீட்டர். இன்று இதையும் தாண்டி நகர எல்லைகளை விரிவாக்கிக் கொண்டே செல்கிறது. விண்ணை எட்டும் அளவிற்கு வீடுகளை கட்டிக்கொண்டே சென்றாலும் வீடு காலி இல்லை எனும் வாசகம் மட்டும் கண்ணில் தெரிகிறது. இன்னும் குறைந்த ஆண்டிலேயே 100கிலோமீட்டர் தொலைவிற்கு சென்னை பெருநகரம் விரிவடைந் தாலும் வியப்படை வதற்கில்லை. அந்த அளவிற்கு வீடுகளும் வீட்டு மனைகளும் தேவைப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் வீட்டு மனை வாங்க வேண்டும் என்று வரும்போதுதான் அது ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தின் கனவாகவும், எட்டாக்கனியாகவும் இன்றளவு இருந்து வருகிறது. அந்த அடித்தட்டு மக்களின் கனவை நினைவாக்கும் வண்ணம் சுலபத்தவணைத் திட்டங்களில் வீட்டுமனைகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு உன்னத நிறுவனம் தான் சென்னை ரியல் புரோமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்.


## TRIPLICANE NEWS

கௌரவ ஆலோசகர்கள்:

T.T. முனுசாமி,
G. மோகனகிருஷ்ணன்,B.A.B.L.,
(செயலாளர்-சென்னை உயர்நீதிமன்றம்)
B. குமார்,M.A.B.L.,
D. கண்ணன்,M.L.,
S. கேசவன்,B.A.B.L.,
E. ராமண்ணா,M.A.B.L.,
T. தேவேந்திரன்,M.A.B.L.,
R.அப்துல் முபீன்,B.A.B.L.,
S. ராஜ்குமார்,B.A.B.L.,
வெண்ணிலா ராஜ்குமார்,

தலைமை நிருபர் :
ம.வெங்கடேசன்,M.A.

***TRIPLICANE NEWS :***
நிர்வாக அலுவலக முகவரி :
எண்.ப.எண். 14, புதிய எண்.43,
மல்லன் பொன்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
செல் : 94443 18719, 9940627772.
E-mail :
triplicanenews@yahoo.com


## வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்பார்ந்த வாசகர்களே!

தங்கள் பகுதியில் நடக்கும் விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், ஆன்மிக நிகழ்ச்சிகள் போன்றவற்றை போட்டோவுடன் டிரிப்ளிகேன் நியூஸ் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கவும். தாங்களும் கதை, கவிதை, கட்டுரை எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**

## வீரசக்தி விநாயகர் கும்பாபிஷேகம்

திருவல்லிக்கேணி, பொன்னப்ப செட்டி தெருவில் உள்ள வீரசக்தி விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் 03-07-2009 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற இருக்கிறது. கோபூஜை, கஜபூஜை, சுபமங்களபூஜை துவங்கி ஹோமங்களும், யாகங்களும் அன்னதான, பிரசாதம் வழங்குதலும் நடைபெற இருக்கிறது. இக்குட முழுக்கு பெருவிழாவிற்கு 6வது மண்டலக்குழுத் தலைவர், 87வது வட்ட மாமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஆர்பிஎம். காமராஜ், தலைமை மருத்துவர், இரத்தவங்கி, அரசுபொதுமருத்துவமனை டாக்டர் கே.செல்வராஜன், 93வது வட்ட மாமன்ற உறுப்பினர் திரு.பொ.மா.சேரன், ஸ்ரீரேணுகா பரமேஸ்வரி ஆலயம் அறங்காவலர் குழுத்தலைவர் திரு.கே.பன்னீர்செல்வம், திமுக திருவல்லிக்கேணி பகுதி தலைவர் திரு.பி.சி.மோகன், 87வட்ட செயலாளர் திரு.கே.ஜி.செந்தில்குமார், ஸ்ரீரேணுகாபரமேஸ்வரி ஆலயம் அறங் காவலர் திரு.கே.செல்வன், திரு. ஏ.மாதவன் மற்றும் பலரும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொள்ள இருக்கிறார்கள். இவ்விழாவை திரு.என்.இராசகோபால், திருமதி ஆர்.மேகலா, திரு.டி.கணேசன், திருமதி.ஜ.சங்கீதா, அறங்காவலர்கள் எஸ்.கணேசன், எஸ்.குமார் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.


**AJAY MARKETING**



AJAY AQUA PACKAGED DRINKING WATER

*Specialist in Gift Articles*

*H.O : 6/23, Agathimuthan St, (Near Union Bank) Triplicane, Chennai - 5.Ph : 42157327, 55349948 9840900631, 32, 33, 34*

*B.O : 23/2, Vadugu Street, Near Bazar Road, Mylapore, Chennai - 600004. Ph : 98403 77004*

சுத்தமான, சுகாதாரமான, சுவையான குடிநீர் தரம் பலமுறை சுத்திகரிப்பு மற்றும் ஆய்வு பரிசோதனைகளை அடிப்படையாக கொண்டது. BIS ஆல் அங்கீகரிக்கப்பட்டது. உங்கள் தாகம் தணிக்க உங்கள் இல்லம் தேடிவர அணுகுங்கள்! இலவச டோர் டெலிவரி!!


## தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பாக திருமதி.ஜி.வளர்மதி அவர்களுக்கு இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பாக தியாகச்சுடர் திருமதி.ஜி.வளர்மதி அவர்களுக்கு இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி சென்னை பிரஸ் கிளப்பில் 28-6-2009, ஞாயிறு மாலை 6.00 மணியளவில் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க தலைவர் **டி.எஸ்.ரவீந்திரதாஸ்** தலைமை வகித்தார். திருமதி.வளர்மதி திருவுருவப்படத்தை **டாக்டர்.சி.எம்.கே.ரெட்டி,** தலைவர், தமிழ்நாடு மருத்துவர்சங்கம் அவர்கள் திறந்துவைத்தார்.

திருமதி.வளர்மதி அவர் களின் நினைவு உரைகளை மாநில, மாவட்ட நிர்வாகிகள் நினைவு கூர்ந்தனர்.


**WANTED**

**Diploma Civil Engineer for VISHALAM BUILDER**

**Ph : 2852 9413, 2842 0938, Cell : 9962607150, 9382833038**

**Old No. 67A, New No. 32, Pillaiyar Koil Street, Triplicane, Chennai - 5**



**OFFICE FOR RENT**

**270 Sq. with interior and Office Materials**

**Contact**

**Thameem Ansari**

**Cell : 9789822025**

2/57, Shaik Dawood Street
Royapettah, Chennai - 600014.
(Near Labbai Mosque)

## அரேபியன் பேரீச்சம்பழம்

Prop. **M. ஹாஜாமுகைதீன்**

**இருசக்கர வாகனம்**
**ஓட்டத் தெரிந்த பையன்கள்**
**தேவை**

மஹபார் இம்பெக்ஸ்
புதிய எண். 150, பழைய எண். 85, ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014.

**செல் : 98414 64520**

## அஸ்கர் பயிற்சி நிறுவனம்

நிறுவிய ஆண்டு – 1980
நிர்வாகம் அஸ்கர் கல்வி டிரஸ்ட் – முஸ்லீம் சிறுபான்மை கல்வி நிறுவனம்
102, டாக்டர் பெசன்ட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 14

| +2 STATE BOARD & CBSE | X STD STATE BOARD MATRIC ANGLO INDIAN BOARD & CBSE | X STD + 2 NIOS NATIONAL INSTITUTE OF OPEN SCHOOLING |
|---|---|---|

+2 பாடங்கள்
கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கம்ப்யூட்டர்
வணிகக் கணிதம், வணிகவியல், பொருளியல், கணக்கியல்
10ம் வகுப்பு
அனைத்து பாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மீடியம்

Spoken English கற்றுத் தரப்படும்

**தொடர்பு கொள்க : 9884326917**

## NELLAI SOUP'S

100% Pure Vegeterian



- Tomato ❖ Mushroom
- Vegetable ❖ Plantainpith

மிக குறைந்த முதலீட்டில் மாதம் 8,000 ரூபாய்க்கு மேல் வருமானம் பெற எங்களை அணுகவும்

**Contact : 044-28475757,**
**Cell : 9094777272, 9094776868**

**NS ASSOCIATIES**
No. 25/10, Mohammed hussain Khan Lane,Royapettah, Chennai - 600014

## MP Batteries

Old No.29, (New No.16), Subadral Street, Triplicane, Chennai - 600 005.
(Opp. Star Theatre & Near Thiruveeteswaran Koil)
Tel : 044-4266 4630, Cell : 93813 30160, 98408 12930, 93823 30160




DEALERS :
EXIDE | AMARON | TATA

SALES & SERVICES :
BATTERIES, UPS, INVERTORS, ELECTRICAL WORKS
Credit Card Accepted

Aachi BILAL

ஜாம்பஜாரில் ஓர் இனிய உதயம்

## அல் ஹலால் டெய்லி பிரஷ்


(ஹைஜீனிக் சிக்கன் சென்டர்)

அன்புடையீர்,
எங்களிடம் ஹலால் முறையில் சுத்தம் செய்து உலகத்தரம் வாய்ந்த கோழிகறிகள் மொத்த விலைக்கும் சில்லறைக்கும் விற்பனை செய்கின்றோம். வீட்டு விசேஷங்களுக்கு ஆர்டரின் பேரில் சப்ளை செய்யப்படும். **டோர் டெலிவரி இலவசம்**

**தினமும் இலவசம்! இலவசம்!! இலவசம்!!!**

**1 கிலோ கோழி கறிக்கு ரூ.5/-மதிப்புள்ள 2 பாக்கெட் ஆச்சி சிக்கன் மசாலா இலவசம்.**
**1/2 கிலோ கோழி கறிக்கு ரூ.5/-மதிப்புள்ள 1 பாக்கெட் ஆச்சி சிக்கன் மசாலா இலவசம்.**

தங்களின் பேராதரவை நாடும் :



**அல் ஹலால் டெய்லி பிரஷ்**
ஹைஜீனிக் சிக்கன் சென்டர்
எண்.5/3, ஜெனரல் சாமி தெரு, ஜாம்பஜார்,
(வாழைப்பழ மார்க்கெட் அருகில்)சென்னை – 600 005.

**போன் : 044 - 6555 5663**

தலைமை : குரோம்பேட்டை
எங்களது கிளைகள் : பல்லாவரம், வேளச்சேரி
விரைவில் : மண்ணடி மற்றும் உங்கள் பகுதிகளிலும்

**செல் : 9884377853, 9840150331**

## C.S.K. MEGA CATERING SERVICES

*All Function Catering Contractor*



கல்யாண வைபவங்களுக்கும் வீட்டில் நடக்கும் எல்லா சுப நிகழ்ச்சிகளுக்கும் நல்ல தரமான முறையில் அறுசுவை ருசியுடன் சுத்தமான சைவை உணவு செய்து தரப்படும். உரிமையாளர் : C.S. **கிருஷ்ணன்**



No. 51/6, Venkatachalam Street, Triplicane, Chennai - 5
Res : Old No.10, New No.26, Theetharappan Street, (Rathna Cafe Backside) Pycrofts Road, Triplicane, Chennai - 600 005.
**Mobile : 92821 37278, 6537 1644**

## JB

**பேட்டரி சேல்ஸ் & சர்விஸ்**

**Authorised Dealer :** EXIDE SF AMARON

இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள் கிடைக்கும்.
**மின்சார தடையா? கவலை வேண்டாம்**
(புதிய UPS மற்றும் இன்வெர்ட்டர்கள்)
மற்றும் UPS, இன்வெர்ட்டர் பேட்டரிகளும் சேல்ஸ் சர்வீஸ்




**300 VA to 5 KV**

புது எண் : 11, பழைய எண்.6, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு, இராயப்பேட்டை, (ஜாம்பஜார் அருகில்) சென்னை – 600014.
(All Master Card Accepted)

**செல் : 98408 88051, 97108 80700, 32432230**



A/C Show Room

BIS 916
HALL MARK
JEWELLERY

# PINKY JEWELLERS

# பிங்கி ஜுவல்லர்ஸ்

தங்க
நகைகளின்
சங்கமம்!



5% Off On
916 KDM
jewellery

**916 BIS HALLMARK JEWELS**

Lowest Wastage Charges
No Making Charges

**NON KDM JEWELS**

NoWastage Charges
No Making Charges

All Birth Lucky Stones Available
We Accept all Credit and Debit Card
We have also introduced a
Monthly Saving Scheme

No.42/95, Pillaiyar Koil Street, Triplicane,
Chennai - 600 005. (Near Zambazaar Market)
Ph : 28612062, 43568780,
Cell : 9444044864, 9841174325

# VISHALAM BUILDERS

**Off : No. 32, Pillaiyar Koil Street, Triplicane, Chennai - 600 005.**
**Ph : 2852 9413, 2842 0938, Cell : 9962607150, 9382833038**

# FLATS FOR SALE

**No.3/10, Krishnappa Street, Chepauk,**
**(near Oveyam Street) Chennai - 600005.**

- நீடித்து உழைக்க தரமான பொருட்களை கொண்டு சிறந்த Engineer மூலம் வடிவமைக்கப்படுகிறது.
- குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
- காற்று வெளிச்சம் உள்ளவாறு கட்டப்படுகிறது. Two Wheeler Parking, & Lift வசதியுடன் கட்டப்படுகிறது.
- நடுத்தர மக்களுக்காக உயர்தரமாக கட்டப்படுகிறது.
- Flat availability குறைவாக உள்ளதால் உடனே Booking செய்யவும்.
- Flat for available



**Air Cool Service**

Specialist in:
Air Conditioner, Washing Machine,
Refrigeration and Microwoven
**Sales & Service**
New # 55, Old # 25, Cella Pillaiyar Koil Street,
Royapetta, Chennai - 600 014.
*N.M. Ragu*
Cell : 9840077725, Off : 4356 7621

**துரைப்பாண்டியன்**
**சமையல்**
**கான்ட்ராக்ட் குக்**
பு.எண்.8, (ப.எண்.13),
பொன்னப்பத் தெரு,
திருவல்லிக்கேணி,சென்னை - 5.
**செல் : 98404 43002**

## அருள்மிகு எல்லையம்மன் ரேணுகா பரமேஸ்வரி திருக்கோயில் திருப்பணிக்கு உதவுவீர்



அருள்மிகு எல்லையம்மன் கோயிலின் திருப் பணிக்கு ரூபாய் 75,00,000 லட்சம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆகவே பொது மக்களும் ஆன்றோர்களும் நண்பர்களும் மனமுவந்து கோயிலின் திருப்பணிக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

மேலும் பக்தர்கள் கோயிலின் திருப்பணிக்காக நிதி உதவி மட்டுமல்லாமல் கோயிலுக்குத் தேவையான செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் போன்றவற்றையும் தங்களால் இயன்ற அளவு வாங்கித் தரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**St.JOHN'S ENGLISH SCHOOL**
**WANTED**
**LADY TEACHERS TO TEACH TAMIL & HINDI**
Min Qualificatio +2
Contact In Person
28, Subadral St,
Triplicane, Chennai 5.
**Ph : 28545265**

**AVAILABLE SHOP FOR RENT 120 Sqft GROUND FLOOR CONTACT IN PERSON**
**Cell No. 9840980149**

# எழுத்தாளர்கள்......

கதாசிரியரென்னும் எழுத்தாளர்கள் நாட்டின் முதுகெலும்பு என்று கூடச் சொல்லலாம். சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள், கற்பனை வளமுள்ளவர்களெல்லாம் எழுத்தாளர்களாக வரமுடியும்.

வரலாற்றையும் வாழ்க்கையின் தத்துவங்கள் இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டுபவர்கள் எழுத்தாளர்களே! அமைதியைக் கடைபிடித்து தங்களின் ஆற்றலால் கற்பனையில் பேனா முனையை ஓட விடுபவர்களெல்லாம் எழுத்தாளர்கள்!

அவர்களால் நாட்டையும் மக்களையும் நல்வழிப்படுத்தவும் முடியும், தீயவழியில் கொண்டு செல்லவும் முடியும். எல்லாமே அவர்களது அறிவுத்திறமையில்தான் இருக்கிறது. புகழ்ச்சிக்கும் புரட்சிக்கும் ஆளாக முடியும்!

இந்த உலகம் மறந்து விட்டதையும், யாரும் அறியாமல் அழிந்துபோனதையும் தேடிப் பிடித்து தெளிவாக நிலை நிறுத்தி, நாட்டுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறுவதே எழுத்தாளர்கள் தான்! பழமைகளை நம்கண் முன்னே புதுமையாக எடுத்துக் கூறுவதே எழுத்தாளர்கள்தான்! தாங்கள் ஒரு சிறந்த எழுத்தாளராக வருவதற்கு அவர்கள் ஆரம்பத்திலிருந்தே எவ்வளவோ இன்னல்களையும் இடையூறுகளையும் சந்தித்து அனுபவித்து அலுத்துப் போனவர்கள்.

விடாமுயற்சியால் தங்களது கற்பனை வளத்தை, கண்ணியத்தோடு கடைப்பிடித்து வறுமையில் வாடினாலும் சக்தியுள்ள பேனா முனையை நம்பி, பேப்பரைக் கையில் எடுத்தவர்கள்தான் இன்று பெரிய எழுத்தாளர்களாக புகழ் பெற்று இருக்கிறார்கள்.

ஒவ்வொரு எழுத்தாளரும் ஆரம்பத்தில் தாங்கள் எழுதியதை ஆர்வமாகவும் ஆசையாகவும் பல பத்திரிக்கைகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு, தினமும் வரும் பேப்பர்களையெல்லாம் எதிர்பார்த்து காத்திருந்து தான் எழுதியது வராத நிலை கண்டு நொந்து நூலாகி இருக்கிறார்கள். அவர்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எழுத்தாளர்களே உணர முடியும்.

நினைத்தவுடன் எல்லோருமே எழுத்தாளர்களாக வந்துவிட முடியாது. அதற்கும் நேரங்காலம் யோகமானதாக இருந்தால் நெறிஞ்சி முள்ளும் மெத்தையாக மாறிவிடும் என்பது எழுத்தாளர்களுக்கு பொருத்தமானதாகும். ஒவ்வொரு எழுத்தாளர்களுக்கும் ஆரம்ப நிலையில் பத்திரிக்கை உலகமே ஆலயமாக இருந்தது. அதன் மூலம் தான் சோதனைகளுக்குப் பிறகும் நடந்த நடையால் கால்கள் ஆணிக் கால்களான பிறகு ஆதரவு கிடைத்தது.

பத்திரிகையாளர்கள் கடைக்கண் திறந்து பார்த்து, எழுத்தாளர்களை மதித்து, அவர்களை எழுத்தாளர் உலகத்தில் பிரவேசிக்க கதவைத் திறந்து வரவேற்றார்கள்.

கால ஓட்டத்தில் சில ஆர்வமிக்க எழுத்தாளர்கள், தாங்களே தங்கள் சக்திக்கு ஏற்றவாறு முயற்சிகள் செய்து, தங்களுக்கு மிகவும் வேண்டியவர்களிடம் உதவி கோரி பணத்தைக் கடனாகப் பெற்று தங்களின் கருத்திலே பெற்று வளர்த்து வந்த கற்பனை வடிவத்தை புத்தகமாக வெளியிட்டதும் உண்டு.

அதற்காக அவர்கள் படும் கஷ்டங்கள், உடல் உழைப்பு, உணர்ச்சிப்பெருக்கு, ஆர்வக்கோளாறு கொஞ்சநஞ்சமல்ல. அது பட்டவர்களுக்குத்தான் தெரியும். அறிமுக எழுத்தாளர்கள் படும்பாடு அவர்கள் ஏறி இறங்கும் பத்திரிகை ஆபிஸ், புத்தக வெளியீட்டு பதிப்பகம் போன்ற இடங்களில் உள்ளவர் களுக்குத்தான் தெரியும்.

எழுத்தாளர்களெல்லாம் இளமையாக இருக்க வேண்டுமென்பதில்லை. எந்த வயதிலும் அவர்கள் எழுதிக்கொண்டே இருக்கலாம்.

எழுத்துக்கும் கற்பனைகளுக்கும் வயது வரம்புகளே கிடையாது என்றும் சிரஞ்சீவி ஆக வாழ்ந்து கொண்டு இருப்பதுதான் எழுத்துலகம். அங்கே வருவார்கள்; போவார்கள்; வந்து கொண்டே இருப்பார்கள்.

## 93வது வட்டத்தில் திமுக கவுன்சிலரின் அதிரடி செயல்பாடு

93வது வட்டத்தில் மாண்புமிகு கலைஞர் அவர்களின் பல திட்டங்கள் நல்ல முறையில் பொ.மா.சேரன் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. திரு ஏஆர்பிஎம்.காமராஜ். அவர்கள் 6வது மண்டலக்குழுத் தலைவர் ஆனதிலிருந்து அவரது தொகுதிக்குட்பட்ட எல்லா இடங்களிலும் கலைஞரின் ஏழைகளுக்கு நல்ல திட்டங்கள் வெகுவிரைவாக நடத்தப்படுகிறது. அதிலும் முதன்மையாக 93வது வட்டம் திரு.பொ.மா.சேரன் அவர்களின் நேரடி மேற்பார்வையில் எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாக அதிரடியாக செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக இந்த தொகுதியில் சாலை ஓர பூங்காக்கள், பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் தங்குதடையின்றி கிடைக்கவழிவகைகள், ரூ2000 வெள்ளநிவாரண நிதி வழங்கிய திட்டம், கடைசியாக மாண்புமிகு முதல்வர் கலைஞரின் வண்ண தொலைக்காட்சி திட்டம் முழுக்க முழுக்க கவுன்சிலரின் நேரடி மேற்பார்வையில் குறிப்பாக குடும்ப அட்டை உள்ள ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற முழுவீச்சோடு செயல்பட்டார். விடுபட்ட அட்டைகாரார்களையும் நேரிலே வரவழைத்து விசாரித்து அவர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்தார். கூட்ட நெரிசலை சமாளிக்க மூன்று மூன்று தெருக்களாக பிரித்து ஒவ்வொரு நாளும் வழங்கப்பட்டது. அந்த தேதியில் வர தவறியவர்களுக்கு மாற்று தேதி அறிவிக்கப்பட்டு தொலைக்காட்சி வழங்கப்பட்டது. இன்றும் கலைஞரின் பல திட்டங்களை செயலாற்ற தயாராக இருக்கிறார். ஆகவே இந்த 93வது வட்ட தொகுதி மக்கள் இவரது கட்சி பாகுபாடு இன்றி செய்யும் இவரது செயல்பாட்டிற்கு பெரும் வரவேற்பு அளிக்கிறார்கள். இன்றும் பல தொகுதியில் வண்ணத்தொலைக்காட்சி திட்டம் துவக்கப்படவே இல்லை. இந்த தொகுதியில் எல்லார்க்கும் கொடுத்து முடிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சம்.



**Arranged loan for purchase of Vacant land, Home, constraction and Mortgage.**
**Interest Rate : 10.5% to 16%**
No.33/4 & 5, Jaiz Complex, 1st Floor,
Triplicane High Road, (opp. to Big Mosque), Chennai - 600005.
**Ph : 044 - 28520056**
**Cell : 9382121639**
email : mrajaestate@yahoo.com

**தாய் ரியல் எஸ்டேட்**
**வீடுகள் வாங்க, விற்க வாடகைக்கு அணுகவும்**
எண் : 161/319, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, எல்லை அம்மன் கோயில்
முன்புறம், ஐஸ்அவுஸ், சென்னை-5
**B.S.VASAN-9941172464**
**9841128212,43588555**
**S.SIVA - 9840075383**

**KING REAL ESTATE**
**கிங் ரியல் எஸ்டேட்**
K. **விஜயன்,** Cell : 9941472675
வீடு வாங்க, விற்க அணுகவும்
NO.25/13, தானப்ப செட்டி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5
எம்ப்ராய்டரிங் சிறந்த முறையில் செய்து தரப்படும்

# திருவல்லிக்கேணியை வலம் வருவோம்! - 3




ஸ்ரீவியாஸராஜ மடாதிபதி, ஸ்ரீஸ்ரீவியாஸராஜ தீர்த்த ஸ்ரீ பாதங்கள் பிரதிஷ்டை செய்த 732 ஸ்ரீவீர ஹனுமான் விக்கிரங்கள் உள்ள திருக்கோயில்களில் சென்னை மாநகரத்தின் திருவல்லிக்கேணி எனும் க்ஷேத்தி ரத்தின் ஒரு பகுதியில் உள்ள ஸ்ரீ சண்பகாம்பிகை சமேத ஸ்ரீதிரு வெட்டீஸ்வரர் எழுந்தருளியுள்ள திருவெட்டீஸ்வரன் பேட்டை நாகப்பையர் தெருவில் அமைந்தி ருக்கும் வீர ஆஞ்சநேயர் திருக்கோயிலும் ஒன்றாகும்.

ஸ்ரீகிருஷ்ண தேவராயர் விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த காலத்தில், 15ம் நூற்றாண்டின் கடைசியில் அவருக் கும் அவர் சந்ததி அரசர்களுக்கும் குருவாக இருந்த ஸ்ரீ வியாஸராஜ ஸ்வாமிகள் இந்தியாவில் 732 இடங்களில் ஸ்தாபித்து வந்துள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் உருவங்கள் வலது பக்கமிருந்து வாலை தலைக்குமேல் தூக்கி இடது பக்கம் வரை கொண்டுவந்து அதில் சிறுமணி கட்டப்பட்டுள்ளதாகவும், இடது கையில் சௌகந்திகா புஷ்பம் மற்றும் வலது கை தலைக்குமேல் தூக்கி துஷ்டர் களை அறைந்து விடுவதைப் போன்றும் வீர ஆஞ்சநேயராக காட்சி அளிக்கும்.

இம்மாதிரியான அழகு வாய்ந்த அனுமன் விக்கிரங்களை பிரதிஷ்டை செய்த மகான் ஸ்ரீவியாஸராஜர். அதுதான் அவருடைய ஆஞ்சநேயருக்கான முத்திரை.

திருவல்லிக்கேணி வட்டா ரத்தில் வசித்து வந்த, ஸ்ரீமத் மத்வாச் சாரியாரின் துவைத மத சித்தாந் தங்களை பின்பற்றி வந்த மாத்வ சமுதாயத்தினர்களின் வேண்டு கோளுக்கிணங்க திருவல்லிக் கேணி, திருவெட்டீஸ்வரன் பேட்டை பகுதியில், ஸ்ரீவீர அனுமன் பிரேரணை பேரில், மிகுதியான 731 சிலைகளில் ஒன்றுதான் ஸ்ரீவியாஸராஜ மடத்தின் தலைவர் ஸ்ரீ வியாஸராஜ தீர்த்தர், கி.பி.1522ஆம் ஆண்டு தக்ஷிண தேசத்தில் திக்விஜயம் செய்து வரும் போது பிரதிஷ்டை செய்துள்ளதாகும்.

பொதுவாக சிவாலயத்தின் அருகாமையில் ஸ்ரீ ஆஞ்சநேயரின் கோயில் இருக்கும். இப்படி திருவெட்டீஸ்வரர் கோயில் அருகாமையில் மேற்படி ஸ்ரீவீர ஆஞ்சநேயர் கோயிலும் அமைந்துள்ளது.

இந்த கோயிலின் சிறப்பம்சம் என்றவென்றால் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீவீர ஹனுமன் பிரம்ம அந்தஸ்து பெற்று, உலகத்தை சிருஷ்டி செய்யும் பிரம்மாவாகவே வணங்கப் படுகிறார் என்று தமிழ்த்தாத்தா என்ற புகழ்பெற்ற தமிழ் அறிஞர் காலஞ்சென்ற ஸ்ரீஉ.வே.சாமி நாதய்யர் திருவெட்டீஸ்வரர் ஸ்தல புராணத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த கோயிலுக்கு சரியான கட்டுமானம் இல்லாமலிருந்தது. ஒருநாள் காலையில் ஆஸ்திக மாத்வ பக்தர் ஸ்ரீனிவாசா தம்பதிகள் காசிக்கு செல்லும் வழியில் இந்த இடத்தில் தங்க வந்தனர். அவருடைய தந்தை இந்த கோயிலில் பூஜை செய்து பராமரித்து வந்தவர். அந்த தம்பதிகளுக்கு அதிர்ச்சியூட்டும் வகையில் அவருடைய தந்தை அங்கு காணவில்லை. கோயிலும் பழுதடைந்திருந்தது. அதனால் காசிக்கு சென்றுவிட தயாராகி அன்று இரவு அங்கு தங்கினார்கள். காலையில் எழுந்து அருகில் இருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் இல்லாததால், குடிக்கவும் குளிக்கவும் தண்ணீர் கிடைக்காமல் வருந்தினார்கள்.

அன்று பூஜைக்கு தண்ணீர் கிடைக்காமல் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார்கள். திடீரென்று ஒரு அசரீரி குரல் கேட்டது. மண்ணால் மூடிக்கிடந்த இடத்தில் ஸ்ரீவீர ஆஞ்சநேயர் விக்கிரகம் இருப்பதாகவும், இந்த விக்கிரத்தையே பூஜை செய்தால், அவர்களுக்கு காசிக்கு சென்று வந்த பலன் முழுமையாக கிடைக்கும் என்றும், அவர்கள் காசிக்கு செல்ல வேண்டியதில்லை. காசிக்கு சென்று அங்கு காசி விஸ்வநாதருக்கு பூஜை செய்த பலன் இங்கிருந்தே கிட்டும் என்றும் அசரீரியின் வாக்கு கேட்டது. இந்த அசரீரியை அந்த தம்பதிகள் கேட்டு ஆச்சரியமும் பிரமிப்பும் அடைந்தவர்களாக, கிணற்றில் மறுபடியும் தண்ணீர் எடுக்க முயன்றார்கள். அப்போது தெருவில் ஒரு கூலி தொழிலாளி யின் குரல் கேட்டது. அவன் கிணற்றில் தூர்வாரும் தொழிலாளி என்றும், கிணற்றில் தூர்வாரவும், புதுக்கிணறு தோண்டித்தரவும் முன்வந்தான். அவன் ஏற்கனவே இருக்கும் கிணற்றின் பக்கத்திலேயே வேறொரு புதுக்கிணறு தோண்டித் தரவும் முன்வந்தான். புதுக்கிணறு தோண்ட அதிலிருந்து தண்ணீர் வேகமாக பீறிட்டுக் கொண்டு ஊற்றாக வர ஆரம்பித்தது. மண்ணால் மூடப்பட்டிருந்த ஸ்ரீவியாஸராஜர் பிரதிஷ்டை செய்திருந்த ஸ்ரீவீர ஆஞ்சநேயர் விக்கிரமும் தெளிவாகத் தெரிந்தது. அந்த தம்பதிகள் மிக்க ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்து, குளித்து நைவேத்யமும் தயார் செய்து பூஜைகள் செய்தபின் அந்த கூலியாட்களுக்கும் பிரசாதம் வழங்க அவனைத் தேடினார்கள். ஆனால் அவன் காணப்படவில்லை. அவர்கள் அதிர்ச்சி அடைந்து அவனை மறுபடியும் தேட முயன்றனர். அப்போது திடீரென்று அசரீரி குரல் கேட்டது. 'அவர்கள் வருத்தம் அடைய வேண்டாம் என்றும், அவர்கள் தயாரித்து ஸ்ரீவீர ஆஞ்சநேயருக்கு சமர்ப்பிக்கப்பட்ட நைவேத்யம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிணறு எடுத்துக் கொடுத்த கூலியாள் வேறு யாரும் இல்லை சிவபெருமானே' என்று தெரிவித்து ' ஸ்ரீ வீர ஆஞ்சநேயருக்கு செய்யப்படும் எந்த பூஜையும் நைவேத்யமும் தனக்கு அளிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், இங்குள்ள கிணற்றின் நீர் கங்கை தீர்த்தம் என்றும், காசிக்கு யாத்திரை சென்று வந்தால் கிடைக்கக்கூடிய புண்ணியபலன் இங்குள்ள கிணற்றின் நீரினால் ஸ்ரீவீர ஆஞ்சநேயருக்கு அபிஷேகம் செய்து வணங்கினாலே சகல புண்ணியங்களும் ஏற்படும்' என்று அசரீரி கூறியது கேட்டதாம். இவ்வளவு சக்திவாய்ந்த வீர ஆஞ்சநேயரை நாமும் துதிப்போம்.

**SHAPE YOUR DREAMS WITH LIC**



**An APT Plan for your Child Education, Tax free Returns for +2, Professional Education and Marriage.**

**80C available for Parents**

**No Market Risk**

**No TDS**

**Give me your Appoinment, Details at your doorsteps**

**T.BALAJI UMALINGAM,** M.A.,
Zonal Manager's Club Member

www.invest-insureindia.com
**Mobile No: 95000 12148**

# CHENNAI REAL PROMOTERS (P)LTD

## திருவல்லிக்கேணி

Regd.off : AI-24, (Old No: AI-124), 8th Main Road, Shanthi Colony, Anna Nagar, Chennai - 600 040. Ph : 044-43016611, 43016461

## அங்கீகாரம் பெற்ற வீட்டுமனைகள் விற்பனைக்கு

**அனைத்து வசதிகளும் அடங்கிய ஒரு அற்புத வீட்டுமனை**

**யாரும் கொடுக்க முடியாத மிக குறைந்த விலையில்**

- ❑ **சுவையான குடிநீர்**
- ❑ **சுகாதாரமான காற்றோட்டம்**
- ❑ **அகன்ற சாலை வசதி**
- ❑ **உடனடியாக வீடுகட்டி குடியேறலாம்**



❖ 600 ச.அடி, 1200 ச.அடி, 2400 ச.அடி, மனைகளாகவும் கிடைக்கும் ❖ ஒவ்வொரு மனையிலும் இரண்டரை வருடத்தில் பலன் கொடுக்கும் தென்னங்கன்றுகள் உள்ளன. ❖ அதை பராமரிக்க பணி ஆட்கள் உள்ளனர் ❖ சுற்றிலும் இரும்புவேலி (வலை) பாதுகாப்பு ❖ நுழைவுவாயிலில் பிரம்மாண்டமான இரும்பு கேட் ❖24 மணி நேர செக்யூரிட்டி

**இத்தனை வசதிகளும் அடங்கிய ஒரு அற்புத வீட்டு மனை ஒரு சதுர அடி விலை ரூ. 84/- மட்டுமே. ரூபாய் 30,000/- மட்டுமே முன்பணமாக செலுத்தி மனையை தங்கள் பெயருக்கே பத்திரப்பதிவு செய்து கொள்ளும் சிறப்பு வசதியும் உண்டு. வட்டியில்லா சுலப தவணை! மனையை பார்வையிட இலவச வாகன வசதி**

**மேலும் விபரங்களுக்கு**

## Cell : 9787335566

**எண் 238/2/4, முதல்மாடி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ரத்னாகேப் பேருந்து நிறுத்தம் அருகில், சென்னை - 600005.**

**சுலப தவணையில் வீட்டுமனைகள் வாங்க!**
**சென்னை ரியல் புரோமோட்டர்ஸ்க்கு வாங்க!**

**32473337, 43567231, 43567241**

**எங்கள் நிறுவனத்திற்கு விற்பனை முகவர்கள் தேவை**


Owned, Published and Printed by A. Bakyaraj. Published from No.7, Ramasamy Maistry Street, Triplicane, Chennai - 5. and Printed at Wonder Prints, 14, Weavers Street, Triplicane, Chennai - 5. **Editor : A.Bakyaraj**